*பிரஸார் பாரதி*

*அகில இந்திய வானொலி, சென்னை - 4*

*02 04 2026 THURSDAY 6 45 AM*

***வணக்கம் - மாநில செய்திகள்***

***தலைப்புச் செய்திகள்***

- *மேற்காசியாவில் நிலவும் மோதலால் ஏற்படும் தாக்கத்திலிருந்து மக்களை பாதுகாப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று அதிகாரிகளை, பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.*

- *கடந்த நிதியாண்டில் பயணிகள் சேவை மூலம் 80 ஆயிரம் கோடி ரூபாய் வருவாய் ஈட்டப்பட்டுள்ளதாக ரயில்வே தெரிவித்துள்ளது.*

- *திமுக அரசு செயல்படுத்திய மக்கள் நலத் திட்டங்களால், தமிழகம் தற்போது முதன்மை மாநிலமாக திகழ்கிறது என்று அக்கட்சி கூறியுள்ளது.*

- *கடந்த அஇஅதிமுக ஆட்சிக்காலத்தில் நிறைவேற்றிய திட்டங்களை தங்களது ஆட்சியில் நிறைவேற்றியது போல் திமுக பொய்ப்பிரச்சாரம் செய்வதாக அக்கட்சி குறை கூறியுள்ளது.*

- *20 வயதுக்குட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்து சாம்பியன் போட்டியில், இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.*

*>>>>>><<<<<<<*

*மேற்காசியாவில் நிலவும் மோதலால் ஏற்படும் தாக்கத்திலிருந்து மக்களை பாதுகாப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று அதிகாரிகளை, பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.*

*புதுதில்லியில் இதுதொடர்பாக நடைபெற்ற பாதுகாப்பு விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவை கூட்டத்தில், பல்வேறு அமைச்சகங்கள் மற்றும் துறைகள் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து அவர் ஆய்வு செய்தார்.*

*சமானிய மக்களுக்கான முக்கிய தேவைகளின் இருப்பு குறித்தும் அவர் ஆய்வு செய்தார்.*

*கரீப் மற்றும் ரபி பருவங்களுக்குத் தேவையான உரங்களின் இருப்புக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து அவர் விவாதித்தார்.*

*மக்களுக்கு தவறான தகவல்கள் மற்றும் வதந்திகள் பரவுவதை தடுக்கவும், உண்மையான தகவல்களை உரிய நேரத்தில் அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் பிரதமர் வலியுறுத்தினார்.*

தற்போதைய உலகளாவிய சூழலால் மக்கள் பாதிக்கப்படாமல் இருப்பதை சம்பந்தப்பட்ட துறைகள் உறுதி செய்ய வேண்டும் என்று அதிகாரிகளுக்கு பிரதமர் அறிவுறுத்தினார்.

வேளாண்மை, உரங்கள், கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து, சரக்குப் போக்குவரத்து, குறு சிறு மற்றும் நடுத்தர தொழில்நிறுவனங்கள் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள சவால்களை எதிர்கொள்வதற்கு எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

அத்துடன், சமையல் எரிவாயு சிலிண்டர், எரிபொருள் வரிக்குறைப்பு மற்றும் மின்சாரத்துறையின் நடவடிக்கைகள் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

பெட்ரோலியப் பொருட்கள் குறிப்பாக சமையல் எரிவாயு சிலிண்டர் விநியோகத்தையும், போதுமான மின்சார உற்பத்தியையும் உறுதி செய்ய மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து, அமைச்சரவை செயலாளர் இக்கூட்டத்தில் விளக்கினார்.

சமையல் எரிவாயு சிலிண்டர் விலையில் மாற்றம் இல்லாமல் இருப்பதையும், சிலிண்டர்களை பதுக்குதல் மற்றும் கள்ளச்சந்தையில் விற்பனை செய்தல் ஆகியவற்றை தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் எடுத்துரைத்தார்.

குழாய் வழி இயற்கை எரிவாயு இணைப்புகளை விரிவாக்கம் செய்வதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சரவை செயலாளர் தெரிவித்தார்.

>>>>><<<<<

கடந்த நிதியாண்டில் பயணிகள் சேவை மூலம் 80 ஆயிரம் கோடி ரூபாய் வருவாய் ஈட்டப்பட்டுள்ளதாக ரயில்வே தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில், இது அதற்கு முந்தைய நிதியாண்டுடன் ஒப்பிடுகையில், 5 புள்ளி ஒன்பது ஆறு சதவீதம் அதிகம் என்று கூறப்பட்டுள்ளது.

மொத்தம் 741 கோடி பயணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது, அதற்கு முந்தைய நிதியாண்டை விட 3 புள்ளி ஐந்து நான்கு சதவீதம் அதிகம் என்றும் அந்த செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>><<<<<

திமுக அரசு செயல்படுத்திய மக்கள் நலத் திட்டங்களால், தமிழகம் தற்போது முதன்மை மாநிலமாக திகழ்கிறது என்று அக்கட்சியின் இளைஞரணி செயலாளர் திரு. உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார்.

வேலூர் மாவட்டம், காட்பாடியில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், தமிழகம் தற்போது இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சியை எட்டியுள்ளதாக குறிப்பிட்டார்.

திமுக நிறைவேற்றிய பல்வேறு திட்டங்களையும் திரு. உதயநிதி ஸ்டாலின் அப்போது பட்டியலிட்டார்.

>>>>><<<<<

கடந்த அஇஅதிமுக ஆட்சிக்காலத்தில் பல்வேறு நலத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளதாக அக்கட்சியின் அமைப்புச் செயலாளர் திரு. தங்கமணி தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோட்டில், தேர்தல் பணிமனையை திறந்து வைத்துப் பேசிய அவர், அஇஅதிமுக நிறைவேற்றிய பல்வேறு திட்டங்களை தங்கள் ஆட்சியில் நிறைவேற்றியது போல் திமுக பொய்ப்பிரச்சாரம் செய்வதாகவும், அதனை முறியடிக்க வீடு வீடாக சென்று பிரச்சாரம் மேற்கொள்ள வேண்டும் என்றும் கட்சித் தொண்டர்களிடம் வலியுறுத்தினார்.

>>>>><<<<<

புனித வெள்ளி மற்றும் ஈஸ்டர் பண்டிகையை ஒட்டி, தாம்பரம் - தென்காசி மற்றும் தென்காசி - தாம்பரம் இடையே சிறப்பு ரயில்களை தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

அதன்படி, தாம்பரத்திலிருந்து தென்காசிக்கு இன்றிரவு மணி 11.10-க்கும், செங்கோட்டையிலிருந்து தாம்பரத்திற்கு வரும் 5ஆம் தேதி இரவு 11 மணிக்கும் சிறப்பு ரயில் இயக்கப்படுகிறது.

செங்கோட்டை – தாம்பரம் இடையே இயக்கப்படும் ரயிலுக்கான முன்பதிவு இன்று காலை 8 மணிக்கு தொடங்குவதாக தெற்கு ரயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

*சட்டப்பேரவை தேர்தலை ஒட்டி மாநிலம் முழுவதும், 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.*

*சேலம் மாவட்ட நிர்வாகம் சார்பில், முதல் தலைமுறை வாக்காளர்களிடையே வாக்களிப்பதன் அவசியம் குறித்து, சைக்கிள் பேரணி மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*(வாய்ஸ் பைட் - விஜயகுமார் 40 செகண்ட்ஸ்)*

*>>>>><<<<<*

*இருவரிச் செய்திகள்*

*ஈரானுடனான போர் குறித்து அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் இன்று காலை அந்நாட்டு மக்களிடையே உரையாற்றுகிறார்.*

*>>>>><<<<<*

*மத்திய தரைக்கடல் பகுதியில் சென்று கொண்டிருந்த படகு கவிழ்ந்து ஏற்பட்ட விபத்தில், 19 பேர் உயிரிழந்தனர். 58 பேரை இத்தாலி கடலோர காவல்படையினர் மீட்டனர்.*

*>>>>><<<<<*

*குஜராத் மாநிலத்தில் உள்ளாட்சித் தேர்தலுக்கான வாக்குப்பதிவு இம்மாதம் 26ஆம் தேதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.*

*>>>>><<<<<*

*மஹாராஷ்ட்ர மாநிலம், Jalna மாவட்டத்தில் நிகழ்ந்த சாலை விபத்தில் 7 பெண் தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.*

*>>>>><<<<<*

*மேற்குவங்க சட்டப்பேரவை தேர்தலில் இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ள 142 தொகுதிகளில் வேட்புமனு தாக்கல் இன்று தொடங்குகிறது.*

*>>>>><<<<<*

பெங்களூருவில் காணாமல் போன 16 வயது சிறுவனை, சென்னை எழும்பூர் ரயில் நிலையத்தில் காவல்துறையினர் மீட்டு. பெற்றோரிடம் ஒப்படைத்தனர்.

>>>>><<<<<

மதுரையில் கல்லூரி மாணவர்கள், முதல்முறை வாக்காளர்கள் ஆகியோரிடையே 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றன.

>>>>><<<<<

காஞ்சிபுரம் மாவட்டம், ஆலந்தூர் சட்டப்பேரவை தொகுதிக்கு உட்பட்ட அய்யப்பன்தாங்கல் ஊராட்சியில் தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

>>>>><<<<<

சென்னையில், கோயம்பேடு சந்தை, வியாசர்பாடி மற்றும் செயின்ட் தாமஸ் மவுண்டில் உள்ள முதியோர் இல்லங்களில் வாக்களிக்க வேண்டியதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

>>>>><<<<<

விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை அருகே ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி, 40 ஆடுகள் உயிரிழந்தன.

>>>>><<<<<

பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி கோவிலில், பங்குனி உத்திரத் திருவிழாவின் முக்கிய நிகழ்வான தேரோட்டம் நேற்று நடைபெற்றது.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

20 வயதுக்குட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்து சாம்பியன் போட்டியில், இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

மாலத்தீவில் நடைபெற்ற இப்போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா 5-0 என்ற கோல்கணக்கில் பூட்டானை வென்றது.

*நாளை நடைபெறவுள்ள இறுதியாட்டத்தில் இந்தியா – பங்களாதேஷை எதிர்கொள்கிறது.*

*>>>>><<<<<*

*20 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய கோப்பை மகளிர் கால்பந்து போட்டியில் இந்தியா இன்று ஜப்பானை எதிர்கொள்கிறது.*

*தாய்லாந்தில் நடைபெறவுள்ள இப்போட்டி மாலை மணி 6.30-க்கு தொடங்குகிறது.*

*>>>>><<<<<*

*ஆசிய கோப்பை மூவர் கூடைப்பந்து சாம்பியன் போட்டியில், இந்தியா பிரதான சுற்றுக்கு முன்னேறியுள்ளது.*

*சிங்கப்பூரில் நடைபெற்று வரும் இப்போட்டியின் தகுதிச் சுற்றில் பஹ்ரைன், கஜகஸ்தான் மற்றும் ஹாங்காங் அணிகளை இந்தியா வென்றது.*

*பிரதான சுற்றில் இந்தியா இடம்பெற்றுள்ள பிரிவில் கத்தார் மற்றும் நியூஸிலாந்து அணிகள் இடம்பெற்றுள்ளன.*

*>>>>><<<<<*

*ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில், தில்லி அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் லக்னோ அணியை வென்றது.*

*லக்னோவில் நடைபெற்ற இப்போட்டியில், முதலில் பேட் செய்த லக்னோ அணி 18 புள்ளி 4 ஓவரில் 141 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.*

*142 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய தில்லி அணி, 17 புள்ளி ஒரு ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 145 ரன் எடுத்து வெற்றி பெற்றது.*

*கொல்கத்தாவில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் கொல்கத்தா – ஹைதராபாத் அணியை எதிர்கொள்கிறது.*

*>>>>><<<<<*

*ருமேனியாவில் நடைபெற்று சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் யூகி பாம்ரி – நியூஸிலாந்தின் மைக்கேல் வீனஸ் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.*

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்த இணை 6-4, 3-6, 10-3 என்ற செட்கணக்கில் ஹங்கேரியின் அலெக்சாண்டர் – கஜகஸ்தானின் *Shevchenko* இணையை வென்றது.

>>>>><<<<<

*c/o* ஸ்பெயினில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் கலியாண்டா பூனாச்சா – தாய்லாந்தின் *Isaro* இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்றில், இந்த இணை 6-2, 6-4 என்ற செட்கணக்கில் இந்தியாவின் விஜய் சுந்தர் பிரசாந்த் – போலந்தின் *Szymon Kiegen* இணையை வென்றது.

>>>>><<<<<